# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1792 - 2013 ජනවාරි මස 04 වැනි සිකුරාදා - 2013.01.04

*1792 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி* IV*(அ) – மாகாண சபைகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, சனவரி மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, சனவரி மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு**

*தென் மாகாண அரசாங்க சேவையில் நூலகர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011(2012)*

2011.06.13 ஆந் திகதிய 221 ஆம் இலக்க தென் மாகாண சபையின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட தென் மாகாண அரசாங்க சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களில், நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்புகளின் ஏற்பாடுகளுக்கமைய தென் மாகாண அரசாங்க சேவையில் நூலகர் சேவையின் III ஆம் வகுப்பின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 பரீட்சை ஆணையாளர் தலைமை அதிபதியினால் 2013, மாச்சு மாதம் மாத்தறை நகரில் இப்போட்டிப் பரீட்சை நடாத்தப்பட இருப்பதோடு இப்போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தேர்ச்சிகளையும் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், தென் மாகாண அரசாங்க சேவையில் நூலகர் சேவையின் III ஆம் வகுப்பின் பதவிகளுக்காக நியமிக்கப்படுவதற்குத் தெரிவுசெய்யப்படுவர்.

3.0 நியமிக்கப்படும் எண்ணிக்கையும் நியமனங்கள் அமுலுக்கு வரும் திகதியும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். நியமன அதிகாரிக்கு ஏதேனும் வெற்றிடத்தின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருப்பதற்கான அதிகாரம் உண்டு.

4.0 **சம்பளம்.-** 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், MN 3-2006-A தென் மாகாண அரசாங்க சேவையில் நூலகர் சேவையின் III ஆம் வகுப்பின் நியமனங்களுக்கு ஏற்புடைய சம்பளத் தொகுதியாக இருப்பதோடு மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 15,005 - 4 × 180 - 6 × 240 - 11 × 320 - 20 × 360 - ரூபா 27,885 ஆகும்.

5.0 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

6.0 தென் மாகாண அரசாங்க சேவையில் நூலகர் சேவையின் III ஆம் வகுப்பின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்இறுதித் திகதிக்கு உடன்முந்திய 05 வருட காலத்திற்குள் தென் மாகாண ஆளுகைப் பிரதேசத்தில் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் தொடர்ச்சியாக 03 வருடகால வதிவை உறுதிசெய்தல் வேண்டும். வதிவை உறுதிசெய்வதற்காக நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேருநர் இடாப்பின் பொழிப்பு ;
(ii) பிரதேச செயலாளரால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ்.

(இ) சிறந்த ஆரோக்கியமும் நல்லொழுக்கமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தேதியில் 18 வயதிற்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உ) (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி ஆகிய 3 மூன்று பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ii) க. பொ. த. (சா. த) பரீட்சையில் கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். இதில் 5 (ஐந்து) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(iii) க. பொ. த. (உ. த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்;

மற்றும்

(ஊ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலக விஞ்ஞானம் தொடர்பான மூன்று வருட கால டிப்ளோமா கற்கை நெறியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) இலங்கை நூலக சபையில் நூலக விஞ்ஞானம் தொடர்பான மூன்று வருட கால டிப்ளோமா கற்கை நெறியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :-(i) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்கு ஏற்புடைய அனைத்துத் தகைமைகளையும் 2013.01.24 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானது.

(ii) தென் மாகாண அரசாங்க சேவையில் நூலகர் சேவையின் III ஆம் வகுப்பின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சைக்கு மூன்று தடவைகளுக்கு மேல் தோற்ற எந்தவொருவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

7.0 **பரீட்சை முறை**.- இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது. சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் பரீட்சை நடாத்தப்பட்டுவதோடு விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

| பாடம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| (i) நூலகவிஞ்ஞானம் | 3 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள் |
| (ii) பொது உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| (iii) பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

மேற்படி பாடங்களுக்குரிய பாடத்திட்டம் கீழே தரப்பட்டுள்ளது :-

7.1 **நூலக விஞ்ஞானம்**.-

(1) **நூலகமும் நூலகரும்** :

(அ) நூலகம் மற்றும் நூலக வரலாறு, புராதன மற்றும் நவீன உலகின் பிரதான நூலகங்கள் ;

(ஆ) எழுத்துத் துறை மற்றும் நூல்கள் உள்ளிட்ட எழுத்து ஊடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ;

(இ) அச்சுக் கலையின் தோற்றம் செயற்றிட்டம் மற்றும் நூலகங்களினதும் சமூகங்களினதும் அபிவிருத்தியில் ஏற்படுத்திய தாக்கம் ;

(ஈ) நூலகங்களின் வகைகள் :

(i) விசேட நூலகங்கள் :- அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்ற நிறுவனங்களில் காணப்படும் நூலகங்கள் ஆராய்ச்சி நூலகங்களின் கட்டமைப்பு, பொறுப்புகள் மற்றும் சேவைகள் ;

(ii) கல்விசார் நூலகங்கள் :- பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற உயர் கல்வி நிறுவனங்களில் காணப்படும் நூலகங்களின் கட்டமைப்பு, பொறுப்புகள் மற்றும் சேவைகள் ;

(iii) பாடசாலை நூலகங்கள்

(iv) பொது நூலகங்கள் :

(v) மடாலய நூலகங்கள், மதம் சார்ந்த நிறுவனங்களின் நூலகங்கள்.

(உ) நூலகக் குழுக்கள்- கட்டமைப்பு, தேவைப்பாடு, முக்கியத்துவம் மற்றும் பொறுப்புகள் ;

(ஊ) நூலகவியல் தொழிலுக்கு ஏற்பான நிபுணத்துவ தொழில்சார் அமைப்புகளும் அவற்றின் பொறுப்புகளும் - தேசிய, சர்வதேச (இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா) ;

(எ) நூலகக் கட்டடங்கள் - திட்டமிடல், கவனத்திற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள், ஏற்கெனவே உள்ள கட்டடமொன்றில் நூலகமொன்றை அமைத்தல், ஒழுங்கமைத்தல் அல்லது தரமுயர்த்தல் ;

(ஏ) நூலகச் சாதனங்களைப் பராமரித்தலும், பாதுகாத்தலும் (Conservation & Preservation)

(ஐ) இடர் (Disaster) மற்றும் இடர் முகாமைத்துவம் (Disaster Management)

(2) **அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும்** :

(அ) நூற் பகுப்பாக்கத்தின் நோக்கமும் பயன்பாடும் ;

(ஆ) இலங்கையிலுள்ள நூலகங்களில் பயன்படுத்தப்படும் பிரதான பகுப்பாக்கத் திட்டங்கள், தூய தசமப்பகுப்பாக்கத் திட்டம், சர்வதேச பகுப்பாக்கத்திட்டம் ;

(இ) நூலகச்சுட்டியின் நோக்கங்கள், அங்குலோ (Anglo) அமெரிக்கப்பட்டியலாக்க விதிமுறைகள் (AACR) ;

(ஈ) நூற் பட்டியல் ;

(உ) AACR2 பதிப்பு முறையைப் பயன்படுத்தி பட்டியல்களைத் தயாரித்தல்.

(3) **நூலக வளங்களும் தகவல் சேவைகளும்** :

(அ) பல்வகை நூலக வளங்கள் ;

(ஆ) நூற் சேர்க்கை, நூற்சேர்க்கை கொள்கை மற்றும் அதன் முக்கியத்துவம் ;

(இ) நூலக வளங்களின் தெரிவு உள்ளிட்ட நூற் கொள்வனவு ;

(i) நூலக வளங்கள் தெரிவின் கோட்பாடும் மூலங்களும் ;

(ii) நூற் கொள்வனவு, ஒழுங்குபடுத்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பச் சேவைகள் ;

(iii) நூல் கணக்கெடுப்பும் நூல் அகற்றலும்

(ஈ) வெளியீடுகள், வெளியீட்டு உரிமம் மற்றும் தணிக்கை ;

(உ) நிகழ் விழிப்புச் சேவை (Current Awareness Service) ;

(ஊ) வாசகர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் ;

(எ) மக்கள் தொடர்பும் நூலக விரிவாக்கச் சேவைகளும்.

(4) **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் (Information Communication Technology)**:

(அ) நூலகங்களில் கணினிப் பயன்பாடும், நூலக சேவைகள் மற்றும் நடவடிக்கைகளில் தகவல் தொழில்நுட்பவியலின் முக்கியத்துவமும் பயனுறுதியும்,

மேலே குறிப்பிட்டுள்ள 04 துறைகளும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்படும் கட்டுரை வகையிலான கட்டாய வினாக்களைக் கொண்டுள்ள ஒரு வினாத்தாள்.

7. 2 **உளச்சார்பு**.- சொற்கள், இலக்கங்கள் மற்றும் உருவங்கள் வடிவில் தரப்படும் வினாக்கள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் முடிவு மற்றும் பிரதிபலிப்பின் உதவியுடன் குறித்த வினாக்கள் தொடர்பான பொருள்விளக்கம், தர்க்கம், பகுப்பாய்வுத் திறன், தொகுப்பாய்வுத் திறன், பரிமாணம் மற்றும் காலத்திற்கும் இடத்துக்குமிடையிலான தொடர்பினை புரிந்துகொள்வதில் ஒரு பரீட்சார்த்திகயின் ஆற்றல் இதனூடாக அளவீடு செய்யப்படும்.

பல்தேர்வு மற்றும் சுருக்க விடைக்கான 50 கேள்விகளைக் கொண்டுள்ள ஒரு வினாத்தாள்.

7.3 **பொது அறிவு**.- தேசிய பிராந்திய மற்றும் உலகத்திலுள்ள பல்வேறு நிறுவனங்கள் சுற்றாடலிலும், சமூகத்திலும் நிலவும் சமூக, கலாசார, கல்விசார், அரசியல், பொருளாதாரம் மற்றும் சம்பந்தப்பட்ட பிற காரணிகளுடன் தொடர்புடைய பொது அறிவும் சமகால நிலைமைகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவும் தெளிவும் இதனூடாக அளவீடு செய்யப்படும்.

பல்தேர்வு மற்றும் சுருக்க விடைக்கான 50 கேள்விகளைக் கொண்டுள்ள ஒரு வினாத்தாள்.

நியமனத்துக்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாத்தாளுக்குமாக ஒதுக்கப்பட்டிருக்கும் புள்ளிகளில் ஆகக்குறைந்தது நாற்பது வீதத்தைப் (40%) பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதோடு, திறந்த போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காக, பெற்றுள்ள புள்ளிகளின் மேல் திறமை ஒழுங்குமுறையைக் கடுமையாகப் பின்பற்றி தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

அறிமுறைப் பரீட்சைப் பெறுபேறுகள் சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைகள் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படும்.

8.0 **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 400 ஐ தென் மாகாண பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-20-39 இன் கீழ் தென் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேச செயலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுடையதாக இருக்கும்). எக்காரணத்திற்காகவும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9.0 **விண்ணப்பங்கள்** : A 4 (21 × 29 செ. மீ.) அளவான தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்துவிண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 03 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும் எஞ்சிய பந்திகளை 2/3ஆம் பக்கத்திலும் அடங்கும் வகையில் தயாரித்து அதற்கு ஏற்பான தகவல்கள் விண்ணப்பதாரியின் கையெழுத்து மூலம் தெளிவாக நிரப்பப்பட்டிருக்க வேண்டும். மேலும், பரீட்சார்த்தி தான் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழியில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்திருத்தல் வேண்டும்.

சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் பரீட்சையின் பெயர் தலைப்பில் உள்ளவாறு சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள், விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை உரிய முறையில் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரி ஏற்க வேண்டும். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுடையதாக இருக்கும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கின்றதா என்பதை விண்ணப்பதாரியினால் பரீட்சித்தல் வேண்டும். அவ்வாறு ஒத்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9.1 விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற கருதுகோளின் அடிப்படையில், பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் தலைமை அதிபதியினால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து விண்ணப்பங்களைக் கோரியுள்ள அறிவித்தலுக்கமைய தகைமைகளைப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையெனக் கண்டுப்பிடிக்கப்படின் குறித்த நபரின் பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படும்.

9.2 விண்ணப்பப்படிவத்தை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தென் மாகாண அரசாங்க சேவையில் நூலகர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2011 (2012)" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

9.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் ஒப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான்,

சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர், அல்லது வருடாந்தச் சம்பளமாக ரூபா 240,360/- அல்லது அதிலும் கூடிய தொகையைப் பெறும் அரச சேவையில் நிரந்தரப்பதவி வகிக்கும் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9.4 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2013.01.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் :-

செயலாளர்,
தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மாவட்ட செயலக கட்டடத்தொகுதி
6 ஆம் மாடி,
காலி.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டதை அடுத்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அதுபற்றிய ஓர் அறிவித்தலை பத்திரிகையில் வெளியிடும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழிந்த பின்னரும் பரீட்சை அனுமதி கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அதுகுறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப் படிவத்தின் நிழற் படப் பிரதி, கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு அத்துடன் பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படவேண்டிய தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள உங்களது கோரிக்கைக் கடிதத்தையும் தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் பயனுடையதாக இருக்கும்.

விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையை விநியோகிப்பதால் ஆண் அல்லது பெண் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதலாகாது. பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவர்களது ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்ட நுழைவு அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

11. பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகக் கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு.

12.0 **பொய்யான தகவல்களை வழங்குதல்** : விண்ணப்பப்படிவத்தில் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறைகளுக்கு அமைவாக எவரேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமையில்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி நிலை செல்லுப்படியற்றதாக்க வாய்ப்புள்ளது. விண்ணப்பதாரி ஏதேனும் பொய்யான தகவலொன்றை வழங்கியிருப்பது தெரியவந்தால் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளது.

13.0 பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் தலைமை அதிபதியின் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் இயைந்தொழுக வேண்டும். மேற்படி சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

14.0 மேலும், இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு எந்தவொரு விடயம் தொடர்பான இறுதித் தீர்மானம் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினுடையதாகும். சகல பரீட்சார்த்திகளும் இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய இயைந்தொழுக கடப்பாடுடையவராவர்.

15.0 இவ்வறிவித்தல் மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன், இவ்வறிவித்தலின் கூற்றுகளில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் சிங்கள மொழி மூல கூற்றுக்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

சமன் தர்ஷன பாண்டிகோராள,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு,
தென் மாகாணம்.

தென் மாகாண அரசாங்க சேவை
ஆணைக்குழு அலுவலகம்,
"மாவட்டச் செயலகக் கட்டடத்தொகுதி,"
காலி,
10.12.2012.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## தென் மாகாண அரசாங்க சேவையில் நூலகர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011(2012)

## Open Competitive Examination for Recruitment to Class III of Southern Provincial Librarians' Service - 2011 (2012)

(தரப்பட்டுள்ள பெட்டியினுள் சரியான குறியீட்டை/இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிடவும்)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(சரியான இலக்கத்தை உரிய கூண்டில் எழுதவும்)

1.0 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துகளில்) உ-ம் : PERERA, A.A.B.C.

1.2 முழுப்பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துகளில்)

1.3 முழுப்பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.0 2.1 நிரந்தர முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

2.2 நிரந்தர முகவரி :----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துகளில்)

3.0 3.1 பால் : ஆண் - 1
பெண் - 0

(சரியான இலக்கத்தை உரிய கூண்டில் எழுதவும்)

3.2 பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

3.3 2012 .......... திகதியன்று வயது : வருடங்கள் மாதங்கள் நாட்கள்

3.4 விண்ணப்பதாரர் நிரந்தரமாக வதியும் மாவட்டம் : காலி 1
மாத்தறை 2
அம்பாந்தோட்டை 3

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

4.0 கல்வித்தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. தர)ப் பரீட்சை தொடர்பான தகவல்கள் (முதலாம் அமர்வு) :----.

(i) ஆண்டும் மாதமும் :----.

(ii) சுட்டிலக்கம் :----.

(iii) பெறுபேறு :----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

4.2 க. பொ. த. (சா. தர)ப் பரீட்சை தொடர்பான தகவல்கள் (இரண்டாம் அமர்வு) :----.

(i) ஆண்டும் மாதமும் :----.

(ii) சுட்டிலக்கம் :----.

(iii) பெறுபேறு :----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

4.3 க. பொ. த. (உ. தர)ப் பரீட்சை தொடர்பான தகவல்கள் :----.

(i) ஆண்டும் மாதமும் :----.

(ii) சுட்டிலக்கம் :----.

(iii) பெறுபேறு :----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

4.4 பரீட்சை அறிவித்தலின் 6.0 (ஈ) பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நீங்கள் நிறைவு செய்துள்ள நூலக விஞ்ஞானம் தொடர்பான மூன்றாண்டு கால டிப்ளோமா தொடர்பான விபரங்கள் :----.

(i) பல்கலைக்கழகம் / நிறுவனம் :----.

(ii) டிப்ளோமா :----.

(iii) ஆண்டு :----.

5.0 ஏனைய தகைமைகள் :----.

6.0 நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டில் ✓ குறியீட்டை இடவும்) (ஆமெனின், விபரங்களைக் குறிப்பிடவும்.

ஆம் ☐ இல்லை ☐

7. 0 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :-
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :-----.
(iii) தொகை :----.

| |
|---|
| பற்றுச்சீட்டினை இங்கு கழன்று போகாத விதத்தில் ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடம் வைத்துக்கொள்ளவும்.) |

8.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை சரியானவையெனத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யாது மற்றும்/அல்லது தவறாக பூர்த்தி செய்துள்ளதனால் ஏற்படும் நட்டத்தையும் நானே ஏற்பேன் என்பதையும் மேலும், எல்லாப் பகுதிகளையும் சரியான முறையில் பூர்த்தி செய்துள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) என்னுடைய இந்த உறுதிமொழி பொய்யானதென நிரூபிக்கப்படின் நியமனம் பெறுவதற்கு முன்னர் அல்லது நியமனம் பெற்ற பின்னர் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் குறிப்பிடுகின்றேன்.

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................. என்பவரை தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியும் என்பதையும் ........................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டாரென்றும் கட்டணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்பதையும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரை)
திகதி :----.

1-53

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்**.

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை - 2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 04.01.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.12.2012 |
| | | வெள்ளி | 11.01.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.12.2012 |
| | | வெள்ளி | 18.01.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.01.2013 |
| | | வியாழன் | 24.01.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.01.2013 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 01.02.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.01.2013 |
| | | வெள்ளி | 08.02.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.01.2013 |
| | | வெள்ளி | 15.02.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.02.2013 |
| | | வெள்ளி | 22.02.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.02.2013 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 01.03.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.02.2013 |
| | | வெள்ளி | 08.03.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.02.2013 |
| | | வெள்ளி | 15.03.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.03.2013 |
| | | வெள்ளி | 22.03.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.03.2013 |
| | | வியாழன் | 28.03.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.03.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.